**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No. 36/2024**
**Prosecution Witness P.W. 1**
.....

Name : திரு. அப்துல் ரஹீம் Calling : தலைமைக்காவலர்

Father's name : திரு. அப்துல் ரஷீத் Religion : முஸ்லீம்

Village : சி2 சுப்பிரமணியபுரம் Age : 53

Taluk : மதுரை மாநகர்

நாள் - **02.04.2026.**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்சமயம் சி2 சுப்பிரமணியபுரம் காவல்நிலையத்தில் குற்றப்பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் சி1 திடீர் நகர் காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் தலைமைக் காவலராக பணியில் இருந்த போது, கடந்த 22.11.2022ம் தேதி 20.00 மணிக்கு சர்பு ஆய்வாளர் கார்த்திக் அவர்களுடன் நானும், தலைமைக்காவலர் 2641 திரு.சபரிநாதன் என்பவரும் திடீர்நகர் காவல்நிலைய சரக எல்லைக்குள் ரோந்தில் இருந்த போது, 20.15 மணிக்கு மதுரை டவுன் முத்து பாலம் அடியில் சந்தேகத்திற்குரிய நபராக நின்று கொண்டிருந்தவரை விசாரிக்க, பின்னால் பெயர் கேட்டு அறிந்த முத்துபாலகிருஷ்ணன் என்ற பொட்டு முத்து, த/பெ. ஆசைப்பாண்டி, தெற்குவாசல், மதுரை என்று கூறியவரை சோதனை செய்த போது, அவர் முதுகிற்கு பின்னால் சட்டைக்குள் ஒரு வாள் மறைத்து வைத்திருந்தது கண்டறியப்பட்டது. மேற்படி வாள் வைத்திருந்த நபர் ஆஜர் எதிரி தான். அதைப் பற்றி கேட்ட போது முதலில் முன்னுக்கு பின் முரணாக சொன்னவர் இறுதியில் தானும், சபரி என்பவரும் பாண்டி வேளாளர் தெருவில் உள்ள ஒரு பள்ளில் எட்டாம் வகுப்பு வரை ஒன்றாக படித்து

வந்தோம் என்றும், இன்று வரை அவர்கள் நண்பர்களாக பழகி வருவதாகவும், சபரி என்பவர் தற்சமயம் போட்டோ கிராபராக உள்ளார் என்றும், அதில் வரும் வருமானத்தை வைத்து இருவரும் தண்ணி அடித்து ஜாலியாக செலவு செய்து வந்ததாகவும், இந்நிலையில் சபரி ஏரியாவில் உள்ள சண்முகவேல் என்பவர் தன்னை சபரியிடம் மட்டும் தான் பேசுவியா, பழகுவியா என்னுடன் பழகமாட்டியா என்று அடிக்கடி அடித்து கொலை மிரட்டல்விடுவதாக சபரி என்பவர் முத்துபாலகிருஷ்ணன் என்பவரிடம் சொல்ல, இதனால் முத்துபாலகிருஷ்ணன் சண்முகவேலை அடித்து கொலை செய்ய திட்டமிட்டு, காத்திருந்ததாகவும், சம்பவ நாளன்று 22.11.2022ம் தேதி இரவு 8.00 மணிக்கு தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த பெரிய வாளை எடுத்து, சண்முகவேல் அடிக்கடி வந்து செல்லும் இடமான முத்துபாலத்தில் அவரை கொலை செய்யும் நோக்குடன் காத்திருந்ததாகவும் கூறினார். எதிரி சொன்ன விபரங்களை சார்பு ஆய்வாளர் கார்த்திக் பதிவு செய்தார். அதில் என்னிடமும், தலைமைக்காவலர் சபரிநாதனிடமும் கையொப்பம் பெற்றுள்ளார். நாங்கள் கையொப்பம் செய்த ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். பின்பு அரசால் தடை செய்யப்பட்டுள்ள வாளை வைத்திருந்த குற்றத்திற்காக சார்பு ஆய்வாளர் அவர்கள் முத்துபாலகிருஷ்ணன் என்பவரை இரவு 20.30 மணிக்கு அதே இடத்தில் கைது செய்தும், பின்பு 20.30 மணி முதல் 21.15 வரை முத்துபாலகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை பதிவு செய்தும், அவரின் ஒப்புதல்வாக்குமூலத்தின்படி ஆஜர் செய்த, வாளை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி **அ.சா.ஆ.2** ஆகும். மேற்படி அத்தாட்சியில் நானும், திரு.சபரிநாதன், தலைமைக்காவலர் 2641 என்பவரும் கையொப்பம் செய்தோம். அப்போது நேரம் 21.15 முதல் 21.45 வரை ஆகும். என்னிடம் காட்டப்படும் வாள் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகும், அது **சா.பொ.1** ஆகும். எதிரி மேற்படி வாளை வைத்திருக்க அரசு உரிமம் எதுவும் பெறவில்லை. சார்பு ஆய்வாளர் எதிரி மீது திடீர்நகர் காவல்நிலையத்தில் வழக்கு

பதிவு செய்தார். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.04.06 10:24:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No. 36/2024**
**Prosecution Witness P.W. 2**

.....

Name : திரு. சபரிநாதன் Calling : தலைமைக்காவலர்

Father's name : திரு. ராஜேந்திரன் Religion : இந்து

Village : சுப்பிரமணியபுரம் Age : 49

Taluk : மதுரை மாநகர்

நாள் - **02.04.2026.**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்சமயம் சுப்பிரமணியபுரம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு திடீர்நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது, 22.11.2022 ம் தேதி 20.00 மணிக்கு நானும், அ.சா.1 மற்றும் சார்பு ஆய்வாளர் கார்த்திக் அவர்களுடன் சரக ரோந்துக்காக மதுரை டவுன், முத்துப்பாலம் அருகில் சென்ற போது, 20.15 மணிக்கு முத்துபாலகிருஷ்ணன் என்ற பொட்டுமுத்து, வயது 29 என்ற நபர் பாலத்திற்கு கீழே நின்றுகொண்டிருந்தார். அவரை சோதனை செய்த போது முன்னுக்குபின் முரணாக பேசியதால், சார்பு ஆய்வாளர் அவரை விசாரித்த போது, அவர் தன் முதுகிற்கு பின்னால் சட்டையில் பெரிய வாளை மறைத்து வைத்திருந்தார், கேட்ட போது நானும், சபரி என்பவரும் நண்பர்கள் என்றும், ஒன்றாக பாண்டிய வேளாளர் பள்ளியில் எட்டாம்வகுப்பு வரை படித்ததாகவும், சபரி என்பவர் தற்போது போட்டோ கிராபர் வேலை பார்த்து வருவதாகவும், அதில் வரும் வருமானத்தில் இருவரும் தண்ணி அடிப்போம் என்றும், அப்போது பாண்டியவேளாளர் தெருவை சேர்ந்த, தற்போது பழங்காநத்தத்தில் குடியிருக்கும் சண்முகவேல் என்பவர் சபரியிடம் முத்துபாலகிருஷ்ணனிடம் சேரக்கூடாது, ஒன்றாக சுற்றக் கூடாது என்றும் கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாகவும், அதை தன்னிடம் சொன்னதால் அன்று காலை வீட்டில் இருந்து 8.00 மணிக்கு பெரிய வாளை ஒன்றை எடுத்து வந்ததாகவும், சண்முகவேலை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு முத்துபாலம் அருகே நின்று கொண்டதாக தெரிவித்தார். மேற்படி விபரங்களை

எதிரி சொல்ல சொல்ல சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த வாக்குமூலத்தில் நானும், அ.சா.1 ம் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது ஆகும், அது **அ.சா.ஆ.3** ஆகும். பின்பு எதிரி எடுத்து ஆஜர் செய்த வாளை சார்பு ஆய்வாளர் என் முன்னிலையில் ஒரு அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், மேற்படி அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வாள் தான் எதிரி எடுத்து ஆஜர் செய்தது, சா.பொ.1 ஆகும், அதன் நீளம் 77 செ.மீ, மரகைப்பிடியின் நீளம் 17-1/2 செ.மீ. இந்த வாளை வைத்திருப்பதற்கு எதிரியிடம் அரசு உரிமம், ஆவணங்கள் எதுவும் இல்லை. பின்பு எதிரியை நிலையம் கெர்ணடு வந்து, சார்பு ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நபர் ஆஜர் எதிரி தான்.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.04.06 10:25:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.